# எமக்கு நிதி வேண்டாம் நீதியே வேண்டும்! 14 வருடங்களாக போராடுவது அதற்காகவே

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவிப்பு




"வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளுக்காக நாங்கள் 14 வருடங்களாகத் தொடர்ந்து போராடி வருவது நிதிக்காக அல்ல, நீதி கோரியே" - என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் யாழ்ப்பாணம் மாவட்ட சங்கத்தின் தலைவி சிவபாதம் இளங்கோதை தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"2024ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் காணாமல்போனவர்களுக்கு எனப் பெரும் நிதி ஒதுக்கியுள்ளார்கள்.

எங்கள் பிள்ளைகள் வீதிகளில் அல்லது காடுகளில் காணாமல்போனவர்கள் அல்லர். மன்னிப்பு அளிப்பதாக அரசும் படைகளும் கூறியதைக் கேட்டு எங்கள் பிள்ளைகள் சரணடைந்தார்கள். எங்கள் வீடுகளுக்குள் புகுந்தும் எங்கள் பிள்ளைகளைக் கடத்திச் சென்றார்கள் - கைது செய்தார்கள். அதன்பின்னரே எங்கள் பிள்ளைகளை அவர்கள் காணாமல் ஆக்கியுள்ளார்கள்.

இது தொடர்பில், சர்வதேச விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என நாங்கள் கோரி வருகிறோம்.

2 ▶

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 28 புதன்கிழமை 15.11.2023 கதிர் 113

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
Poo Aadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்

## நெடுந்தீவில் கைதான 22 இந்திய மீனவர்களில் 21 பேர் விடுதலை - ஒருவர் சிறையில் அடைப்பு!

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 21 பேரை நிபந்தனையுடன் விடுதலை செய்தும், ஒருவருக்கு சிறைத் தண்டனை விதித்தும் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அதாவது 21 பேரும் ஐந்து ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட 18 மாதச் சிறைத் தண்டனையுடன் விடுவிக்கப்பட்டனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட 22 இந்திய மீனவர்கள் தொடர்பான வழக்கு விசாரணை இன்று ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்றது.

இதன்போது 22 மீனவர்களும் ஊர்காவற்றுறை நீதிவான் ஜே.கஜநிதிபாலன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவர்களில் ஒருவர் இரண்டாவது தடவையாக இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டிய நிலையில் அவருக்குச் சிறைத் தண்டனை விதித்தும், 2 ▶

## கிரிக்கெட் வீரர்களுக்கு பொருத்தமற்ற மருந்துகள் வைத்தியரின் தவறே என்கிறார் தயாசிறி எம்.பி.



இலங்கை கிரிக்கெட் அணியின் வைத்தியர் ஒருவர் வழங்கிய பொருத்தமற்ற மருந்தினால்தான், இலங்கை அணியின் வீரர்கள் உபாதைக்கு உள்ளாகியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கோப் குழுவில் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

அந்த வைத்தியரால் செலுத்தப்பட்ட ஊசிகளினால் வீரர்களின் பாதங் களில் பல்வேறு பிரச்சினைகள் தோன்றியுள்ளதாகவும், அவர் தொழில்முறை விளையாட்டு வைத்தியர் அல்ல என்பதையும் தயாசிறி ஜயசேகர எம்.பி. சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இதன்போது வீண் செலவு செய்வதை நிறுத்துமாறும், 2 ▶

## யாழ் மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில் 100 மில்லி மீற்றருக்கும் அதிக மழை வீழ்ச்சி!

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக யாழ்ப்பாண பிராந்திய வளிமண்டலவியல் திணைக்களப் பொறுப்பதிகாரி த.பிரதீபன் தெரிவித்தார்.

நேற்று (14) காலை 8.30 மணி முதல் இன்று (15) காலை 8.30 மணி வரையான மழைவீழ்ச்சிப் பதிவை அடிப்படையாகக் கொண்டே யாழ்ப்பாணத்தில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை வீழ்ச்சி 2 ▶

## கிரிக்கெட் கொள்ளைக் கூட்டத்தைப் பாதுகாக்கவே கோப் குழுவின் தலைவர் நடவடிக்கை எடுக்கிறார்

### நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷ வித்தானகே



கிரிக்கெட் சபை கொள்ளையடித்துள்ளது என்பதை ஒட்டுமொத்த நாடும் ஏற்றுக் கொண்டுள்ள நிலையில், அந்தக் கொள்ளைக் கூட்டத்தை பாதுகாக்க கோப் குழுவின் தலைவர் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷ வித்தானகே தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் இன்று உரையாற்றியபோதே அவர் இந்தக் குற்றச்சாட்டினை முன்வைத்தார்.

கிரிக்கெட் சபை நேற்று கோப் குழுவில் முன்னிலையானது. இவர்களிடம் இரண்டு மணிநேரம் சாட்சியங்கள் பெறப்பட்டன. ஆனால், இந்த இரண்டு மணித்தியாலங்கள் தொடர்பாக சபாநாயகர் விசாரணை நடத்த வேண்டும். 2 ▶

## யாழில் மூளைக் காய்ச்சலால் கிராம சேவையாளர் மரணம்

யாழ்ப்பாணத்தில் மூளைக் காய்ச்சலால் கிராம சேவையாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உடுப்பிட்டி வடக்கு ஜே-353 கிராம சேவகர் பிரிவில் கடமையாற்றி வந்த குமாரன் குகதாசன் (வயது 48) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவர் தீபாவளி தினத்தன்று தனது வீட்டில் இருந்த வேளை திடீரென மயங்கி விழுந்துள்ளார். அதையடுத்து வீட்டார் அவரை அச்சுவேலி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர்.

அவர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். மரண விசாரணையின்போது மூளைக் காய்ச்சலால் மரணம் ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## பொருளாதார நெருக்கடிக்கு காரணமான ராஜபக்சக்கள் ஒவ்வொரு குடிமகனுக்கும் இழப்பீட்டை வழங்கவேண்டும்!

### நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு



நாட்டில் உள்ள 22 மில்லியன் மக்களுக்கும் இழப்பீடு வழங்குவதற்குத் தேவையான பணம் ராஜபக்ச குடும்பத்தினரிடம் இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பின் இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு கருத்துரைக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார 2 ▶

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# ரி - 56 ரக துப்பாக்கியின் 750 ரவைகள் கண்டெடுப்பு நெடுந்தீவில் பரபரப்பு



யாழ்ப்பாணம் - நெடுந்தீவில் 750 இற்கும் மேற்பட்ட துப்பாக்கி ரவைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

நெடுந்தீவு கிழக்கு, 15ஆம் வட்டாரம் பகுதியில் மக்கள் நடமாட்டம் இல்லாத தனியார் காணியிலேயே இந்தத் துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டன.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய அந்தப் பகுதியில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ள நெடுந்தீவுப் பொலிஸார் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்றனர்.

ஜே.சி.பி. இயந்திரத்தின் உதவியுடன் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் இணைந்து நேற்று நடத்திய தேடுதலில் ரி - 56 ரகத் துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் 750 இற்கும் மேற்பட்ட ரவைகள் கண்டு பிடிக்கப்பட்டன.

தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக தேடுதல் நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ள முடியாத நிலையில் இடைநிறுத்தப்பட்டது. (அ)

## ஆளுநர் கிண்ண ரக்பி செவன்ஸ் 2023 தொடர் அனுசரணையாளராக நிப்பொன் பெயின்ட்



ஆளுநர் கிண்ணத்துக்கான மாகாணங்களுக்கிடையில் நடைபெறவுள்ள ரக்பி செவன்ஸ் 2023 சுற்றுத் தொடருக்கான அனுசரணையாளராக செயற்படுவதற்குக் கரங்கோர்த்துள்ளதாக நிப்பொன் பெயின்ட் லங்கா நிறுவனம் அறிவித்துள்ளது.

## எமக்கு நிதி வேண்டாம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைகளை மேற்கொள்ளாது நிதியைத் தர முயல்கின்றனர். காணாமல் போனோருக்கான நிதியைத் தென்னிலங்கையில் காணாமல்போனோருக்கு வழங்குங்கள். எங்களுக்கு இந்தப் பணம் வேண்டாம். நாங்கள் தேடுவது எங்கள் பிள்ளைகளையே.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெற்றோர்களில் 100 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்து விட்டனர். ஆனாலும், நாங்கள் தொடர்ந்து எங்கள் உறவுகளைத் தேடி வருகின்றோம்.

எனவே, பணம் தந்து எங்களை ஏமாற்ற வேண்டாம். நாங்கள் காசு வாங்க வர மாட்டோம். எங்களுக்கு நீதியே வேண்டும்.

14 வருடங்களாக நாங்கள் தொடர்ந்து போராடுவது காசுக்காக அல்ல. எங்கள் பிள்ளைகளுக்காகவே நாங்கள் தொடர்ந்து போராடி வருகின்றோம்." - என்றார். (அ)

## கிரிக்கெட் வீரர்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாட்டுப் பயணங்களுக்கு ஊடகவியலாளர்களை அழைத்துச் செல்வதில் வெளிப்படைத் தன்மையைப் பேணுமாறும் இலங்கைக் கிரிக்கெட் நிறுவன அதிகாரிகளுக்கு கோப் குழு ஆலோசனை வழங்கியுள்ளது.

அதேநேரம், மேலும் 3 நாட்களுக்கு இலங்கை கிரிக்கெட் சபையின் அதிகாரிகளை அழைக்கவும் கோப் குழு தீர்மானித்துள்ளது. (04)

## பொருளாதார நெருக்கடிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெருக்கடிக்கு காரணமானவர்கள் உரிய முறையில் பொறுப்புக்கூற வேண்டும் என்றும் பொறுப்புடையவர்களிடம் இருந்து பணத்தை மீட்கும் பணியை இப்போதே ஆரம்பிக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அப்போதைய ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ச, அவரது சகோதரர்கள் மற்றும் அவர்களுடன் பணியாற்றிய பலரால் அரசாங்கம் மற்றும் பொது மக்களின் சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டதனாலேயே நாடு வங்குரோத்து நிலையை அடைந்தது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் இழப்பீடு வழங்குமாறும், கொள்ளையடிக்கப்பட்ட பணத்தைத் திறைச்சேறிக்குக் கொண்டுவரும்படியும், ராஜபக்ச குடும்பத்தினருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். (04)

## கிரிக்கெட் கொள்ளைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த இரண்டு மணித்தியாலங்களில் மக்களின் ஆணையை காலால் எட்டியுதைக்கும் செயற்பாடுதான் மேற்கொள்ளப்பட்டிருந்தது. கோப் குழுவின் சிரேஷ்ட உறுப்பினர்கள், இந்தப் பணியை மிகவும் சிறப்பாக முன்னெடுத்திருந்தனர்.

இதற்கு மேலும் கிரிக்கெட் சபையை கோப் குழுவுக்கு முன்னிலைப்படுத்தினால், நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றவாளிகளாகவும் கிரிக்கெட் சபை உறுப்பினர்கள் தூய்மையானவர்களாகவும் மாற்றப்பட்டு விடுவார்கள்.

கிரிக்கெட் சபைக்கு எதிராக பாரதூரமான கேள்விகள் கேட்கப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், கோப் குழுவின் தலைவர், இவற்றுக்குப் பதில் வழங்க வேண்டாம் என கிரிக்கெட் சபை அதிகாரிகளுக்கு சைகை மூலம் காண்பித்துக் கொண்டிருந்தார்.

கிரிக்கெட் சபை கொள்ளையடித்துள்ளது என்பதை ஒட்டுமொத்த நாடும் ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், அந்தக் கொள்ளைக் கூட்டத்தைப் பாதுகாக்க கோப் குழுவின் தலைவர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

27,28,29 ஆகிய திகதிகளில் கோப் குழு முன்னிலையில் கிரிக்கெட் சபையை மீண்டும் அழைப்பித்து, கோப் குழுவின் தலைவர் இன்றி விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும், எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## நெடுந்தீவில் கைதான 22....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய 21 மீனவர்களை நிபந்தனையுடன் விடுதலை செய்தும் நீதிவான் உத்தவிட்டார். (அ)

## யாழ் மாவட்டத்தில் கடந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிவாகியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அச்சுவேலியில் 175.4 மில்லி மீற்றர், பருத்தித்துறையில் 170.8 , தெல்லிப்பழையில் 139.2, மீசாலையில் 133, தொல்புரத்தில் 118, யாழ்ப்பாணம் மத்தியில் 68.7, கோட்டைப் பகுதியில் 58.8, சாவகச்சேரியில் 34.4, அம்பனில் 24.7, நயினாதீவில் 6.8, நெடுந்தீவில் 2.2 மில்லி மீற்றர் அளவுகளிலான மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளன.

மேலும், கிளிநொச்சியில் 99.9 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் ஆனையிறவில் 56.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் அக்கராயனில் 128.4 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார்.




## விற்பனையாளர் தேவை

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

**உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட**
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV

**காலைக்கதிர் TV YouTube தளம்**

# கலாசாலையில் நூற்றாண்டுச் சிறப்புரை நிறைவு மருத்துவர் சத்தியமூர்த்தி சிறப்புரை ஆற்றினார்



கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இந்த ஆண்டின் ஜனவரி மாதம் முதல் தொடர்ச்சியாக ஒவ்வொரு புதன்கிழமையும் இடம்பெற்று வந்த நூற்றாண்டுச் சிறப்புரை நிகழ்ச்சியின் நிறைவு நிகழ்வு இன்று காலை 8.30 மணிக்கு கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி அதிதியாகக் கலந்து கொண்டு ஆசிரியரும் நேர்மனப்பாங்கும் என்ற பொருளில் சிறப்புரை ஆற்றினார். கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளர் வி.எஸ்.குணசீலன் அதிதி அறிமுகவுரையை ஆற்றினார்.

நிகழ்வின்போது நூற்றாண்டு நிகழ்வுகளை ஆவணப்படுத்துவதில் பங்களிப்பு நல்கிய கலாசாலையின் கற்பித்தல்சாரா உத்தியோகத்தர் செல்வநாயகம் கஜந்தன் மற்றும் ஆசிரிய மாணவர்களான தங்கன் இன்பதாசன், செலஸ்தீன் கனிஸ்ரன் ஆகியோர் கலாசாலை ஊடக மன்றத்தால் மதிப்பளிக்கப்பட்டனர்.

ஊடக மன்றக் காப்பாளர் விரிவுரையாளர் தர்சினி முத்துராஜாவின் நெறிப்படுத்திலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மருத்துவர் சத்தியமூர்த்தி கௌரவம் பெற்ற மூவருக்குமான நூற்றாண்டு நினைவுச் சின்னங்களை வழங்கிக் கௌரவித்தார்.

# திருகோணமலை மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம்



(ஹஸ்பர்)

திருகோண மலை மாவட்ட விவசாயக் குழுக்கூட்டமானது மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி அவர்களின் தலைமையில் நேற்று திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் திருகோணமலை மாவட்ட நீர்ப்பாசனப் பணிப்பாளர் ஏ.கே. அப்துல் ஜப்பார், மாவட்ட செயலக விவசாய பணிப்பாளர் டொக்டர். டி.கருணைநாதன், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள் மற்றும் விவசாய அமைப்பின் தலைவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# அக்கரைப்பற்றில் விவசாயத்தை வளப்படுத்த விசேட பிரார்த்தனை

(எம்.எப்.நவாஸ்)

அக்கரைப்பற்று ஸகாத் நிதியத்தினால் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை அக்கரைப்பற்று ஜ/ம்மா பெரிய பள்ளிவாசலினால் விவசாயத்தை வளப்படுத்துவோம் எனும் தொனிப் பொருளில் துவா பிரார்த்தனையும் விசேட உரையும் இடம் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# பரசூட் முறை மூலம் பயிர் ஸ்தாபித்தல் ஆலிம் நகரில்



விவசாயத் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற நெற்செய்கைகளில் புதிய தொழிநுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம் அதிக இலாபத்தினை ஈட்டுவதற்கான பரசூட் முறை மூலம் பயிர் ஸ்தாபித்தல் செயற்பாடானது அக்கரைப்பற்று ஆலிம்நகர் நிலையப் பொறுப்பு விவசாயப் போதனாசிரியர் ஏ.ஜி. பிர்னாஸ் ஹரீஸ் தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்காக, உணவு மற்றும் விவசாய ஸ்தாபனமானது தெரிவு செய்யப்பட்ட எஸ்.எம்.ஜஃபர் எனும் விவசாயிக்குத் தேவையான விவசாய உள்ளீடுகளை இலவசமாக வழங்குகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



# உலக வரைபடத்தில் காஸாவே இருக்கக் கூடாது! இஸ்ரேல் அமைச்சரின் கருத்தால் அதிர்வலை



உலக வரைபடத்தில் காஸா என்ற பகுதியே இனி இருக்கக் கூடாது என்று இஸ்ரேல் நிதியமைச்சர் பேஸலேல் ஸ்மாட்ரிச் கூறி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் தலைமையிலான கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் தீவிர வலதுசாரிக் கட்சிகளில் ஒன்றான யூத தாயகக் கட்சியின் தலைவரான அவர் இது குறித்து நேற்று கருத்துத் தெரிவிக்கும்போது,

காஸா பகுதியில் வசிக்கும் அரேபியர்கள் அனைவரும் தாமாக முன்வந்து உலகின் பிற நாடுகளுக்கு வெளியேற வேண்டும். கடந்த 75 ஆண்டுகளாக அந்தப் பகுதியில் அவர்கள் அகதிகளாகவும், வறுமை மற்றும் தாக்குதல் அபாயத்திலும் இருந்து வருகின்றனர். காஸாவிலிருந்து வெளியேறுவதுதான் அவர்களுக்கான உண்மையான நிவாரணம் ஆகும்.

உலக வரைபடத்தில் காஸா என்ற ஒரு ஆட்சிப் பகுதி இருப்பதை இஸ்ரேலால் இனியும் அனுமதிக்க முடியாது என்றார்.

முன்னதாக, அமெரிக்காவில் வெளியாகும் 'தி வால் ஸ்ட்ரீட் ஜேனல்' நாளிதழில் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் தலைமையிலான லிக்குட் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் டேனி டனானும், முக்கிய கூட்டணிக் கட்சியான யேஷ் அடீடைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ராம் பென் பாரக்கும் எழுதியுள்ள கட்டுரையில், காஸாவிலிருந்து வெளியேற விரும்பும் அரபு குடும்பத்தினரை மேற்கத்திய நாடுகள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தனர்.

இந்த நிலையில், அதே கருத்தை நெதன்யாகு அரசில் முக்கிய அமைச்சர் பொறுப்பை வகிக்கும் பேஸலேல் ஸ்மாட்ரிச்சும் தற்போது வெளிப்படுத்தியுள்ளார்.

இது, காஸாவில் தற்போது நடைபெற்று வரும் போருக்குப் பிறகு அந்தப் பகுதியின் எதிர்காலம் குறித்த கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

# காஸாவில் இஸ்ரேல் ராணுவம் சுற்றி வளைப்பு மருத்துவமனைக்குள்ளேயே உடல்கள் அடக்கம்




காஸாவின் மிகப் பெரிய மற்றும் முக்கிய மருத்துவமனையான அல்-ஷிஃபா மருத்துவமனையை இஸ்ரேல் ராணுவம் சுற்றிவளைத்துள்ளதால் அங்கு சிகிச்சையை தொடர முடியாமல் இறந்துபோன நோயாளிகளின் உடல்கள் அந்த மருத்துவமனை வளாகத்துக்குள்ளேயே அடக்கம் செய்யப்பட்டன.

அந்த மருத்துவமனைக்குக் கீழே ஹமாஸ் அமைப்பினர் சுரங்க நிலைகளை அமைத்துள்ளதாக இஸ்ரேல் குற்றம் சாட்டி வருகிறது. எனினும், இதற்கான ஆதாரங்கள் எதையும் அந்த நாடு வெளியிடவில்லை. இந்தக் குற்றச்சாட்டை ஹமாஸ் அமைப்பும் மருத்துவமனை நிர்வாகமும் திட்டவட்டமாக மறுத்து வருகின்றன.

இந்த நிலையில், காஸாவுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தி வரும் இஸ்ரேல் ராணுவம் அந்த மருத்துமனையை சுற்றிவளைத்து தாக்குதல் நடத்தி வருகிறது.

மேலும், எரிபொருள் பற்றாக்குறையால் மின்தடை ஏற்பட்டு அந்த மருத்துவமனையின் செயல்பாடுளும் முடக்கப்பட்டுள்ளன.

இதன் விளைவாக, 'இன்குபேட்டரில்' பாதுகாக்கப்பட்டு வந்த குறைப்பிரசவ சிசுக்கள் வெளியே எடுத்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 3 சிசுக்கள் உள்பட சுமார் 40 நோயாளிகள் சிகிச்சை நிறுத்தப்பட்டதால் உயிரிழந்ததாக ஹமாஸ் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

உயிரிழந்த அனைவரது உடல்களும், மருத்துவமனை வளாகத்துக்குள் மிகப் பெரிய பள்ளம் தோண்டப்பட்டு அதில் கூட்டாக அடக்கம் செய்யப்பட்டதாக அவர்கள் கூறினர்.

அல்-ஷிஃபா மருத்துவமனையில் மட்டும் தற்போது 650 நோயாளிகளும், அடைக்கலம் தேடி வந்துள்ள பொதுமக்கள் 5,000 முதல் 7,000 பேரும் சிக்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.



# யேமனுக்கு அருகில் அகதிகள் படகு விபத்து கடலுக்குள் வீழ்ந்த 49 பேரைக் காணவில்லை

யேமன் நாட்டுக்கு அருகே அகதிகள் படகு கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அதிலிருந்த 49 பேரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆபிரிக்க நாடுகளிலிருந்து எண்ணெய் வளம் மிக்க வளைகுடா நாடுகளை நோக்கி 75 பேருடன் வந்து கொண்டிருந்த அந்தப் படகு, வேகமாக வீசிய காற்றில் நிலைகுலைந்து அதிலிருந்தவர்கள் கடலுக்குள் விழுந்ததாகக் கூறப்படுகிறது.

விபத்துப் பகுதியிலிருந்து 26 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ள நிலையில், எஞ்சிய 49 பேரும் மாயமாகியுள்ளதாக யேமன் கடலோரக் காவல்படையினர் கூறினர். மாயமானவர்களில் யாரும் இதுவரை கண்டறியப்படாத நிலையில், விபத்தில் அவர்கள் அனைவரும் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. (04)

# உத்தராகண்ட்டில் சுரங்கப்பாதையில் சிக்கியுள்ள 40 தொழிலாளர்களும் பத்திரமாக மீட்கப்படுவர்!

## மாநில முதல்வர் புஷ்கர் சிங் தாமி உறுதியளிப்பு

இந்தியாவின் உத்தராகண்ட்டில் சுரங்கப்பாதையில் சிக்கியுள்ள 40 தொழிலாளர்களும் பத்திரமாக மீட்கப்படுவர் என்று அந்த மாநில முதல்வர் புஷ்கர் சிங் தாமி உறுதி அளித்துள்ளார். அவர்களைக் காப்பாற்ற மீட்புப் தொடர்ந்து நடைபெறுகின்றன.

உத்தராகண்டில் சார்தாம் நெடுஞ்சாலை திட்டத்தின் ஒரு பகுதியாக உத்தரகாசி, யமுனோத்ரியை இணைக்கும் வகையில் சில்க்யாரா வளைவு - பர்காட் இடையே 4.5 கிலோ மீற்றர் தொலைவுக்கு சுரங்கப் பாதை அமைக்கப்பட்டு வருகிறது.

கடந்த 12 ஆம் திகதி அதிகாலை 4 மணி அளவில் 60 மீற்றர் தொலைவு சுரங்கப் பாதையில் மண் சரிந்தது. இருபுறமும் மணல் மூடிய நிலையில் சுரங்கப் பாதைக்குள் 40 தொழிலாளர்கள் சிக்கி உள்ளனர். பல்வேறு துறைகளை சேர்ந்த 200 க்கும் மேற்பட்ட நிபுணர்கள் இரவு பகலாக மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். மூன்றாவது நாளாக நேற்று மீட்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்றன.

சுரங்கப் பாதையில் சிக்கியுள்ள தொழிலாளர்கள் சுவாசிப்பதற்காக குழாய் வழியாக ஒக்சிஜன் செலுத்தப்பட்டு வருகிறது. உணவு பொருட்கள், குடிநீர் உள்ளிட்டவை மற்றொரு குழாய் வழியாக விநியோகிக்கப்படுகிறது. வோக்கி டோக்கி மூலம் தொழிலாளர்களுடன் அதிகாரிகள் அவ்வப்போது பேசி வருகின்றனர்.

தற்போது சுரங்கப்பாதையை மூடியுள்ள மணல் குவியலில் பக்கவாட்டில் துளையிடும் பணி நடைபெற்று வருகிறது. இதன்படி எர்த் ஆகர் என்ற இயந்திரம் மூலம் பக்கவாட்டில் துளையிட்டு ராட்சத இரும்பு குழாய்கள் சொருகப்பட்டு வருகின்றன. இந்த இரும்பு குழாய் இணைப்பு வழியாக 40 தொழிலாளர்களையும் பத்திரமாக மீட்க திட்டமிடப்பட்டு உள்ளது.

சுரங்கத்தில் சிக்கியுள்ள தொழிலாளர்கள் நேற்று ஒரு காகிதத்தில் தங்கள் சூழ்நிலையை எழுதி குழாய் வழியாக மீட்புப் படை அதிகாரிகளுக்கு அனுப்பினர். அதில், ஒக்சிஜன் போதுமான அளவு இருக்கிறது. போதிய வெளிச்சம் இருக்கிறது. வோக்கி டோக்கியை இயக்க தேவையான பட்டரிகள் உள்ளன. குடிநீர் போதுமான அளவில் உள்ளது. குழாய் வழியாக அனுப்பப்படும் உணவுப் பொருட்கள் தொழிலாளர்களின் பசிக்கு போதுமானதாக இல்லை. கூடுதல் உணவுப் பொருட்களை




குழாய் வழியாக அனுப்ப வேண்டும், என்று கோரப்பட்டு உள்ளது.

உத்தராகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி நேற்று 2 ஆவது நாளாக சம்பவ இடத்தில் முகாமிட்டு மீட்புப் பணிகளை ஆய்வு செய்தார்.

அவர் கூறும்போது, மீட்புப் பணிகளை நானே நேரில் மேற்பார்வையிட்டு வருகிறேன். சுரங்கத்தில் சிக்கியுள்ள தொழிலாளர்களின் குடும்பங்களோடு பேசி ஆறுதல் கூறினேன். தொழிலாளர்களுக்கு தேவையான உணவு, குடிநீர், ஒக்சிஜன் குழாய் வழியாக விநியோகம் செய்யப்படுகிறது. 40 தொழிலாளர்களும் விரைவில் பத்திரமாக மீட்கப்படுவார்கள். பிரதமர் நரேந்திர மோடி அவ்வப்போது தொடர்பு கொண்டு தொழிலாளர்களின் நிலை குறித்து விசாரித்து வருகிறார், என்று தெரிவித்தார்.

விபத்துக்கான காரணத்தை கண்டறிய 6 பேர் அடங்கிய சிறப்பு குழுவை உத்தராகண்ட் அரசு நியமித்துள்ளது. அக்குழு சம்பவ இடத்துக்கு சென்று ஆய்வு செய்து வருகிறது. (04)

# அம்பாறை மாவட்ட வறிய குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கிவைப்பு



(எம்.எம்.றம்ஸீன்)

உலக உணவுத் திட்டம் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து பல்வேறு வகையான வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அதன் ஓர் அங்கமாக அம்பாறை மாவட்டத்திலுள்ள வறிய, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் உணவுத் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கில் உலர் உணவுகளை வழங்கும் வேலைத் திட்டத்திற்கு உதவிக் கரம் நீட்டிவருகின்றது.

அந்தவகையில், நிந்தவூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 25 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய 2793 பயனாளிக் குடும்பங்கள்தெரிவு செய்யப்பட்டு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன

அவர்களுக்கான உலக உணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம். அப்துல் லத்தீப் தலைமையில் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம அவர்கள் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு உலர் உணவு பொதிகளை வழங்கி வைத்தார்.

இதன் போது தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் ஒரு குடும்பத்திற்கு இரண்டு மாதங்களுக்குத் தேவையான ரூபா. 15,000 பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

மேலும் இந் நிகழ்வில் அதிதிகளாக அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஏ.அனீஸ், உலக உணவுத் திட்டத்தின் இணைப்பாளர் எஸ்.பத்மன் மற்றும் உலக உணவுத்திட்ட நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ஏ.வின்சன் அவர்களும் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம்.சுல்பிகார் அவர்களின் நெறிப்படுத்தலில் இடம் பெற்ற இந்நிகழ்வில் ஏனைய அதிதிகளாக நிந்தவூர் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர், கணக்காளர், நிருவாக உத்தியோகத்தர், நிருவாக கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர், மேலதிக மாவட்ட பதிவாளர் மற்றும் இத்திட்டத்தின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

# கல்முனை மாநகர சபையின் வேலைத் திட்டங்களில் அரசியல் தலையீடு கிடையாது – ஆணையாளர் அஸ்மி

(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையின் வேலைத் திட்டங்களில் எந்தவொரு அரசியல் தலையீடும் கிடையாது என்று மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்முனை மாநகர பிரதான பஸ் தரிப்பு நிலையத்தில் நீண்ட காலத் தேவையாக இருந்து வருகின்ற நவீன வசதிகள் கொண்ட மலசல கூடத் தொகுதியானது நீர் வழங்கல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் விரிவுபடுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு மற்றும் மாநகர சபையின் பங்களிப்புடன் தற்போது துரிதமாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

தேசிய பத்திரிகையில் திறந்த விலைமனுக் கோரல் செய்யப்பட்டு, உரிய கேள்வி நடைமுறைகள் பின்பற்றப்பட்டு, இவ்வேலைத் திட்டத்திற்கான ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

மாநகர சபையினால் இவ்வாறான வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றபோது சுயாதீனமாகவும் வெளிப்படைத் தன்மையுடனுமே அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. இதில் எவ்வித அரசியல் தலையீடுகளும் இடம்பெறுவதில்லை என்பதை பொது மக்களுக்கு உறுதியாக தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நிலையில் மேற்படி மலசல கூடத் தொகுதி நிர்மாணம் உள்ளிட்ட வேலைத் திட்டங்கள் மற்றும் நிர்வாக விடயங்களில் சிலர் விசமத்தனமானதும் உண்மைக்குப் புறம்பானதுமான தகவல்களை சமூக வலைத் தளங்களில் பரப்பி வருகின்றமை தொடர்பாக எனது அவதானத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுமானால் குறித்த நபர்களுக்கு எதிராக தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும், கல்முனை மாநகர சபையின் சேவைகள் மற்றும் வேலைத் திட்டங்கள் உள்ளிட்ட எந்த விடயமாயினும் உண்மையான தகவல்களை அறிய விரும்புவோர் அலுவலக நேரங்களில் நேரடியாக வருகைதந்தோ அல்லது தொலைபேசி மூலமாகவோ அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதையும் அறியத் தருகின்றேன்- என்றார்.




# தென்கிழக்குப் பல்கலைக்கழக ஊடக பிரிவுக்கு புதிய நிர்வாகிகள் தெரிவு



(நூருல் ஹுதா உமர்)

தென்கிழக்கு பல்கலைக்கழக ஊடகப் பிரிவுக்கு புதிய நிர்வாகிகள் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கரினால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

பல்கலைகழக ஊடகப் பிரிவின் இணைப்பாளராக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எப்.எச்.ஏ.ஷிப்லி, செயலாளராக தென் கிழக்கு பல்கலைக்கழக கணக்காய்வு உதவியாளர் எஸ்.எம். கலீல் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் ஊடக பிரிவுக்கு உறுப்பினர்களாக சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எம்.எம். சிராஜ், விரிவுரையாளர் எம்.அப்துல் ரஸாக், விரிவுரையாளர் சதீக்கா பர்வீன், விடுதி பொறுப்பாளர் ஆர். ரிஸானா, சிரேஷ்ட நூலக உதவியாளர் சீ.எம்.ஏ. முனாஸ், ஆய்வு கூட உதவியாளர் எம்.வை அமீர், உட்பட பல்கலைக்கழக மாணவர் சார்பில் எம்.ஏ. ஸீம் பிஸ்தி (கலை கலாசார பீடம்), டி.எம்.வை. லசித் (பொறியியல் பீடம்), இஸட்.எஸ்.எஸ். குணரத்ன (தொழிநுட்பப் பீடம்) ஆகியோரும் ஊடகப் பிரிவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழக ஊடகப் பிரிவினைப் பலப்படுத்தி மாணவர்களை ஒன்றிணைத்து எதிர்காலத்தில் சிறப்பாக பெறுபேறுகளை மக்கள் முன் கொண்டு செல்வதற்கான ஆக்கபூர்வமான திட்டங்கள் குறித்து விசேட கலந்துரையாடலும் உபவேந்தர் தலைமையில் இடம்பெற்றது.

# புதிய அதிபர்களுக்கான சேவை முன் பயிற்சி நாளை ஆரம்பம்!

(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை அதிபர் சேவை தர மூன்றுக்கு தெரிவான புதிய அதிபர்களுக்கான சேவை முன் பயிற்சி நாளை 16 ஆம் திகதி வியாழக்கிழமை நாடளாவிய ரீதியில் ஆரம்பமாகின்றது.

கல்முனை மற்றும் சம்மாந்துறை வலய புதிய அதிபர்களுக்கான சேவை முன் பயிற்சி நிந்தவூர் அல் அஸ்றக் தேசிய பாடசாலை ஹாசிம் மண்டபத்தில் நடைபெற இருக்கிறது.

16 ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம் 15 ஆம் தேதி வரை இப்பயிற்சி நடைபெற இருக்கிறது.

இதேவேளை, திருக்கோவில் மற்றும் அக்கரைப்பற்று வலய புதிய அதிபர்களுக்கான சேவை முன் பயிற்சி அக்கரைப்பற்று முஸ்லிம் தேசிய பாடசாலையில் நடைபெற இருக்கிறமையும் குறிப்பிடத்தக்கது.

# இறக்குமதிக் கலாசாரம் சுதேசியக் கலைஞர்களை மலினப்படுத்தும் செயல் - சிறீதரன் எம்.பி. சாடல்



எங்கள் மண்ணின் கலைஞர்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்து, சுதேசியக் கலைகளையும் கலைஞர்களையும் மதிப்பளிக்கும் கைதடி மத்தி குமரநகர் சனசமூக நிலையத்தின் கலைப்பணி மெச்சுதற்குரியது.

கலைத்துவப் பாரம்பரியமும் அடையாளமும் மிக்க எங்கள் மண்ணின் கலைஞர்களைப் புறக்கணித்து, இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ்சார் கலைகள் அத்தனைக்கும், தென்னிந்தியக் கலைஞர்களை முன்னிலைப்படுத்தும் 'இறக்குமதிக் கலாசாரம்' யாழ்ப் பாணத்தில் முகிழ்ப்புப் பெற்றுள்ளமை இந்த மண்ணின் சுதேசியக் கலைஞர்களையும், இளைய தலைமுறைத் திறமையாளர்களையும் மலினப்படுத்துவதாகவே உள்ளது.

குறிப்பாக இனவிடுதலைப்போரையும், ஈழத்தமிழர்களது தேசிய இயக்கத்தையும் கொச்சைப்படுத்தியோரையும், இன அழிப்புப்போரில் எமது மக்கள் கொத்துக்கொத்தாகக் கொன்றொழிக்கப்படும் போது எந்தச் சலனமுமற்று தமது தனிமனித வளர்ச்சிக்காய் அயராதுழைத்தோரையும் எங்கள் மண்ணுக்கு அழைத்து மதிப்பளிப்பதும், ஈழத்திற்கு வந்த பின்னர் தமது தனிப்பட்ட நலன்களுக்கான அப்பிரபலங்கள் உரைக்கும் பசப்பு வார்த்தைகளும், இது இளைஞர்களைத் திசைதிருப்பும் ஓர் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சிநிரலோ என்ற எண்ணத்தை மக்களிடையே விதைத்துள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற, கைதடி மத்தி குமரநகர் சனசமூக நிலையத்தின் 67 ஆவது ஆண்டு நிறைவுவிழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இருப்பழிந்து போய்க்கொண்டிருக்கும் ஈழத்தமிழர்களது பண்பாட்டுத் தொடர்ச்சியை மீள நிலைநிறுத்துவதில் கலைகளுக்கும், கலைஞர்களுக்கும் பெரும்பங்கிருக்கிறது.

அத்தகையதோர் சூழலில் துறைசார் ஆற்றலர்கள் தம்மைத்தாமே நிலைநிறுத்துவதற்குரிய களங்களற்று இருக்கையில், மக்கள் திரட்சியை அதிபரிப்பதற்காக எங்கள் மண்ணின் ஆலயங்கள், அமைப்புகள் என்பவற்றில் பெரும்பாலானவை தென்னிந்தியக் கலைஞர்களுக்கும், மக்களிடையே பரிச்சயம் மிக்க பிரபலங்களுக்கும் முக்கியத்துவம் வழங்குகின்ற நிலை மாற்றம்பெற்று, அந்தந்த மண்ணின் கலைஞர்களுக்கும், இளைஞர்களுக்கும் அவர்களது கலைத்திறனுக்கும் முக்கியத்துவம் வழங்கப்படவேண்டும், என்றும் அவர் எடுத்துரைத்தார்.

குமரநகர் சனசமூக நிலையத்தின் தலைவர் அ.செந்தூரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், தென்மராட்சி மண்ணின் பாரம்பரிய கலைநிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டதோடு, அந்த மண்ணின் மூத்த கலைஞர்களும் மதிக்களிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (02)

# இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் பயிற்சி நெறி பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி வைப்பு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் 6 பயிற்சி நிலையங்களில் பயிற்சிநெறிகளை பூர்த்தி செய்த 500 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி வைக்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் பண்பாட்டு மையத்தில் இடம்பெற்றது. இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட உதவிப் பணிப்பாளர் கே.நிரஞ்சன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் இலங்கை தொழில்பயிற்சி அதிகாரசபையின் தலைவர் பிரசன்ன ரணசிங்க பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக வட மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளர் அம்பல வாணர் சிவபாலசுந்தரம், வட மாகாண கல்வியமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன் ஆகியோரும், கௌரவ அதிதிகளாக இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் உப தலைவர் சதுர டீ சில்வா, இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் பணிப்பாளர் பிரியந்த வீரசிங்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# திருகோணமலை மாவட்ட செயலகத்தில் டெங்குக் குழுக்கூட்டம் நடைபெற்றது

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் டெங்கு குழுக்கூட்டமானது மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி அவர்களின் தலைமையில் மாவட்டச் செயலக உப ஒன்றுகூடல் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

திருகோணமலை மாவட்டத்தில் ஆண்டு வாரியாக டெங்கு நோய் பரவலும் மக்களின் எண்ணிக்கையும், கடந்த 10 ஆண்டுகளில் டெங்கு வழக்குகள், மாவட்டத்தில் டெங்கின் நிலைமை (வழக்குகளும் இறப்புக்களும்), டெங்கின் தற்போதைய போக்கு போன்ற பல விடயங்கள் திருகோணமலை சுகாதார சேவைகளின் பிராந்திய பணிப்பாளர் டொக்டர் வி.பிரேமானந்த் மற்றும் பூச்சியியல் அதிகாரியினாலும் எடுத்து கூறப்பட்டது.

மேலும் பூச்சியியல் கண்காணிப்பு என்றால் என்ன? , நோக்கங்கள், இனப்பெருக்கம் செய்யும் இடங்கள், டெங்குவை தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் தொடர்பான நடவடிக்கைகள் போன்ற பல விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இக்கூட்டத்தில் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், நிர்வாக உத்தியோகத்தர், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், துறைசார் அதிகாரிகள், துறைசார் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.






## ராஜீவ்காந்தி கொலை வழக்கில் விடுதலையானோர் விடுவிக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல்



ராஜீவ்காந்தி கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்டு திருச்சி முகாமில் அடைக்கப்பட்டுள்ள ராபர்ட் பயஸ் உள்ளிட்ட இருவர் தங்களை விடுவிக்கக் கோரி உயர் நீதிமன்றக் கிளையில் மனு தாக்கல் செய்தனர்.

இதுதொடர்பாக ராபர்ட் பயஸ் தாக்கல் செய்துள்ள மனுவில்,

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் 32 ஆண்டுகள் சிறைவாசத்துக்குப் பின் 11.11.2022 இல் உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டேன். சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட நாளில் இருந்து கொட்டப்பட்டு இலங்கை அகதிகள் முகாமில் தங்கியுள்ளேன்.

இந்த முகாம் சிறையைவிட மோசமானது. அறையை விட்டு வெளியே வரவும், மற்றவர்களுடன் பழகவும் அனுமதிப்பதில்லை. சிறையிலிருந்து விடுதலையான பிறகும் அதே நிலை தொடர்வதால் மன உளைச்சலுக்கு ஆளாகி உள்ளேன்.

முகாமில் இருந்து விடுதலை செய்யக் கோரி முகாம் அதிகாரிகளிடம் கேட்டபோது இலங்கைக்கு நாடு கடத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவித்தனர். என்னை இலங்கைக்கு அனுப்புவது மரண தண்டனைக்கு ஈடானது. இலங்கைக்கு நாங்கள் சென்றால் கண்டிப்பாக கொலை செய்யப்படுவோம்.

எனவே, நான் இலங்கை செல்லவிரும்பவில்லை. என் மனைவி, மகன், சகோதரி ஆகியோர் நெதர்லாந்தில் வசித்து வருகின்றனர். என்னை முகாமிலிருந்து விடுவித்தால் எஞ்சியிருக்கும் வாழ்நாளை நெதர்லாந்தில் உள்ள என் குடும்பத்தினருடன் கழிப்பேன்.

இதனால், என்னை கொட்டப்பட்டு முகாமிலிருந்து விடுவித்து, நெதர்லாந்து அல்லது வேறு நாட்டுக்குச் செல்ல அனுமதிக்க உத்தர விட வேண்டும், என்று கூறப்பட்டிருந்தது.

அதேபோல, ஜெயக்குமார் தாக்கல் செய்த மனுவில், தன்னை முகாமிலிருந்து விடுதலை செய்து சென்னையில் உள்ள தனது குடும்பத்தினருடன் வாழ அனுமதிக்க வேண்டும், எனக்கூறியுள்ளார். இந்த மனுக்கள் இன்று விசாரணைக்கு வரவிருப்பதாக முன்கூட்டிக்கிடைத்த செய்திகள் தெரிவித்திருந்தன.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.11.2023இல் வெளியிடப்பெற்றது.